**வரையறுத்த இலங்கை சீனி (தனியார்) கம்பனி - 2017**

-----------------------------------------------------------------------------------------------------------

வரையறுத்த இலங்கை சீனி (தனியார்) கம்பனியின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான இலாபம் அல்லது நட்டம், ஏனைய விரிவான வருமானக்கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் என்னால் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென கருதும் மீளாய்வாண்டிற்கான கம்பனியின் செயற்பாடுகள் சம்பந்தமான எனது அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

**1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு**

-----------------------------------------------------------------------------------------------------------

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர்கள் சபை பொறுப்பாக உள்ளது.

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

------------------------------------------------------

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

(அ) முழுமையாகப் பெறுமானத்தேய்வு செய்யப்பட்ட ரூபா 1,425,160,007 கிரயமான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள், கம்பனியால் பயன்படுத்தப்பட்டிருந்தும் அச்சொத்துக்களின் விளைதிறன் பொருளாதார ஆயுட்காலத்தை மீளாய்வு செய்தும் மீள்மதிப்புச் செய்தும் தேவையான செம்மையாக்கல்கள் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஆ) நிகழத்தக்க வரிச் சொத்துக்கள் / பொறுப்புக்களை கணிக்கும் போது 2017 இன் 24 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரி அதிகாரச்சட்டம் மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 12 இன் 46 மற்றும் 47 ஆம் பந்தியின் பிரகாரம் கணக்கீட்டு காலப்பகுதியின் இறுதியில் விதிக்கப்பட்டுள்ள வரி விகிதம் ஈடுபடுத்தப்படுதல் வேண்டும். எனினும், கம்பனியால் 28 சதவீத வரி விகிதத்திற்குப் பதிலாக 12 சதவீத வரி விகிதம் ஈடுபடுத்தியதன் காரணமாக மீளாய்வாண்டின் போது நிகழத்தக்க வரிச் செலவு ரூபா 295,600,375 ஆல் குறைத்து கணிப்பிடப்பட்டிருந்தது.

(இ) 2014 ஆம் ஆண்டிலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 1,184,931 தொகையான வர்த்தக மற்றும் ஏனைய மீதிகளை அறவீடு செய்வதற்காக கம்பனியால் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) வழங்குனர்கள் மற்றும் சேவை வழங்குனர்களுக்குச் செலுத்தப்பட்ட முறையே ரூபா 3,379,359 மற்றும் ரூபா 1,037,081 தொகையான முற்பணங்கள் 2013 ஆம் ஆண்டிலிருந்து காணப்பட்ட போதிலும் அவற்றினை அறவீடு செய்வதற்காக தேவையான நடவடிக்கைகள் கம்பனியால் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) ஊழியர் சேமலாபம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியங்களுக்காகச் செலுத்த வேண்டிய ரூபா 13,658,977 மிகைக் கட்டணங்களை 2011 ஆம் ஆண்டிலிருந்து தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) பெல்வத்த சீனித் தொழிற்சாலையால் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட ரூபா 592,468,478 தொகையான கடன் பணம் 1987 ஆம் ஆண்டிலிருந்து தீர்த்துவைக்கப்படாது காணப்பட்டது.

(எ) செவனகல சீனித் தொழிற்சாலையால் விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட ரூபா 45,689,091 தொகையான கடன் மீதிகள் 2 ஆண்டுகளிலிருந்து 6 ஆண்டுகள் வரையான காலம் அறவிடப்படாது காணப்பட்டிருந்தும் அம்மீதிகளை அறவீடு செய்வதற்காக கம்பனியால் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.5 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அபிப்பிராயத்தை முனைப்பழியுள்ளதாக்குவதற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தைத் தவிர்த்து, 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கம்பனியின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2. ஏனைய சட்ட மற்றும் ஒழுங்குபடுத்துதல் தேவைப்பாடு தொடர்பான அறிக்கை

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் பிரகாரம் என்னால் பின்வரும் விடயங்கள் தரப்படுகின்றன.

(அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படை மற்றும் கணக்காய்வின் நோக்கெல்லையும் மட்டுப்பாடுகளும் 2.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ளவாறாகும்.

(ஆ) எனது அபிப்பிராயம் -

- முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களிலிருந்தான தாக்கங்களைத் தவிர்த்து கணக்காய்விற்குத் தேவையான அனைத்து தகவல்களும் விளக்கமளித்தல்களும் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டது எனவும் எனது பரிசோதனைகளிலிருந்து தோன்றும் வகையில் கம்பனியால் முறையான கணக்கறிக்கைகள் பேணப்பட்டுள்ளது என்பதுவும்

- கம்பனியால் நிதிக்கூற்றுக்கள் 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 151 ஆம் பிரிவில் காட்டப்பட்டுள்ள தேவைப்பாடுகளுடன் இணங்கியுள்ளது என்பதுவும் எனது அபிப்பிராயமாகும்.

## 3. சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான இணக்கமின்மை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுக்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டம் | |
| (i) 131 ஆம் பிரிவு | வருடாந்த அறிக்கையானது கம்பனியின் வருடாந்த பொதுக்கூட்டத் திகதியிலிருந்து 30 வேலை நாட்களுக்குள் கம்பனியின் பதிவாளருக்கு ஒப்படைக்கப்பட வேண்டிய போதிலும், கம்பனியால் மீளாய்வாண்டிற்கான ஆண்டறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) 133 ஆம் பிரிவு | ஒவ்வொரு ஆண்டுக்கு ஒரு தடவை கம்பனியின் பணிப்பாளர்கள் சபையினால் கம்பனியின் ஐந்தொகை திகதியிலிருந்து ஒரு மாதத்தினை விடப் பிந்தாமலும் முன்னைய வருடாந்த கூட்டத்தின் பின்னர் பதினைந்து மாதங்கள் பிந்தாத ஒரு திகதியின் போது நடாத்துவதற்காக பங்குதாரர்களின் வருடாந்தக் கூட்டம் கூட்டப்பட வேண்டிய போதிலும், கம்பனியால் 2014 ஆம் ஆண்டின் பின்னர் அவ்வாறான ஒரு கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயற்பாட்டு நடவடிக்கையும் மீளாய்வும்

2011 ஆகஸ்ட் 11 ஆந் திகதி 2011 இன் 43 ஆம் இலக்க குறைந்த செயற்பாட்டுச் சொத்துக்களை மறுசீரமைத்தல் அதிகாரச்சட்டத்தின் கீழ் தோற்றுவிக்கப்படுகின்ற வரையறுத்த இலங்கை சீனி தனியார் கம்பனியின் இரண்டு செயற்பாட்டுப் பிரிவுகளாக பெல்வத்தை சீனிக் கம்பனி மற்றும் செவனகல சீனிக் கம்பனி செயற்படுகின்றன. இக்கம்பனியின் பிரதான செயற்பாட்டு நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்துவது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செவனகல சீனிக் கம்பனிக்குச் சொந்தமான கரும்பு பயிர்ச்செய்கை பண்ணக்கூடிய மொத்த நிலப்பரப்பு 4215 ஹெக்டயர்களாக இருந்த பொதிலும், 2017 ஆம் ஆண்டு வரை கம்பனியின் பயிர்ச்செய்கை பண்ணப்பட்ட மொத்த நிலப்பரப்பு 3504 ஹெக்டயர்களாக இருந்தன. அதற்கிணங்க, தொழிற்சாலைகளின் செயற்பாடுகளை உச்ச இயலளவுடன் பேணுவதற்குத் தேவையான கரும்பு வழங்கலைப் பெற்றுக்கொள்வதற்கு போதியளவான காணிகள் கம்பனிக்குக் காணப்பட்டிருந்தும் அக்கம்பனிகளில் பயிர்ச்செய்கை மேற்கொண்டு தொழிற்சாலைகளின் உற்பத்திகளை அதிகரிப்பதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) செவனகல சீனிக் கம்பனி 2012 ஆம் ஆண்டிலிருந்து 2017 ஆம் ஆண்டு வரையான 06 ஆண்டுகள் காலத்தை கவனத்திற்கு எடுத்துக்கொண்ட போது ஒரு ஹெக்டயருக்குப் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த கரும்பு விளைச்சல் படிப்படியாக குறைவடைந்திருந்தது. 2016 ஆம் ஆண்டின் போது ஒரு ஹெக்டயருக்கான கரும்பு விளைச்சல் 86 மெற்றிக்தொன்களாக இருந்த போதிலும், 2017 ஆம் ஆண்டளவில் 69 மெற்றிக்தொன்கள் வரை குறைவடைந்திருந்தது. எனினும், இந்நிலைமையை மேம்படுத்துவதற்கு கம்பனியால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) போக்குவரத்திற்காக அதிக காலம் எடுத்தல், தொழிற்சாலைகளின் இடர்பாடுகள், கரும்புத் தண்டுகளில் காணப்படுகின்ற சருகுகள் மற்றும் கழிவுப் பொருட்களின் காரணமாக சீனி தயாரிப்பதற்கு ஈடுபடுத்தப்படுகின்ற கரும்புத் தண்டுகளில் காணப்படுகின்ற சீனிகளின் அளவு 2012 ஆம் ஆண்டிலிருந்து 2017 ஆம் ஆண்டு வரை முறையே பெல்வத்த சீனிக் கம்பனியின் ஒரு மெட்ரிக் தொன் கரும்பிற்கு 11.23 சதவீதத்திலிருந்து 7.95 சதவீதம் வரையும் செவனகல சீனிக் கம்பனியில் 7.95 சதவீதத்திலிருந்து 7.62 சதவீதம் வரையும் குறைவடைந்திருந்தது. அவ்வாறே அந்த கரும்புத் தண்டுகளிலிருந்து சீனி பிழிந்தெடுக்கும் சதவீதம் 2012 ஆம் ஆண்டிலிருந்து 2017 ஆம் ஆண்டு வரை பெல்வத்த சீனிக் கம்பனியில் முறையே 8.95 சதவீதத்திலிருந்து 7.3 சதவீதம் வரையும் செவனகல சீனிக் கம்பனியில் முறையே 8.01 சதவீதத்திலிருந்து 7.67 சதவீதம் வரையும் குறைவடைந்திருந்தது. எவ்வாறாயினும், இந்நிலைமையைத் தவர்த்துக் கொள்வதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) கரும்பு வழங்கல் குறைவடைந்ததன் காரணமாக கம்பனியின் உச்ச இயலளவான 837,500 மெட்ரிக் தொன் கரும்புகளில் 35 சதவீதமானவை மீளாய்வாண்டின் போது பயன்பாட்டிற்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கவில்லை. எனவே கம்பனியின் சீனி உற்பத்தி முன்னைய ஆண்டில் 51,422 மெட்ரிக் தொன்களாக இருந்தும் மீளாய்வாண்டளவில் 42,841 மெட்ரிக்தொன்கள் வரை 17 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

(உ) மீளாய்வாண்டின் போது சீனி உற்பத்தி வீழ்ச்சியடைந்ததன் காரணமாக எதனோல் உற்பத்தியின் பிரதான மூலப்பொருளாகிய மொலேசஸ் உற்பத்தி குறைவடைதல்

மற்றும் எதனோல் விற்பனை அளவு குறைவடைந்ததனால் ஸ்பிறீட் களஞ்சிய தாங்கி அதிக காலம் நிரம்பி காணப்படாததன் காரணமாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் எதனோல் உற்பத்தி 11,917,279 லீற்றர்களிலிருந்து 7,045,228 லீற்றர்கள் வரை 41 சதவீதத்தால் குறைவடைந்திருந்தும் இந்நிலைமையைத் தவிர்ப்பதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஊ) சீனி உற்பத்தி குறைவடைந்ததனால் அப்புறப்படுத்தப்பட்ட சக்கைகளின் உதவியுடன் தயாரிக்கப்பட்ட மின்வலுவானது முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டளவில் 16,346 மெகாவாட்களிலிருந்து 12,534 மெகாவாட்கள் வரை குறைவடைந்திருந்ததனால் மீளாய்வாண்டின் போது மாற்றுவழியிலான மின்வலுவுக்காக கம்பனி மேலதிக கிரயத்தை செலவு செய்ய வேண்டியிருததும் இந்நிலைமையினை முகாமைத்துவம் செய்வதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(எ) காணிகள் அபிவிருத்திப் பிரிவுக்குச் சொந்தமான 43 உழவு இயந்திரங்களில் 29 உழிவு இயந்திரங்கள் மீளாய்வாண்டின் இறுதியின் போது திருத்தம் செய்யும் நடவடிக்கைகளுக்காக கமத்தொழில் வேலைத்தளங்களில் 06 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததன் காரணமாக உற்பத்தி நடவடிக்கைகள் பாதகமான தாக்கமளித்திருந்தும் அந்த உழவு இயந்திரங்களை விரைவாக திருத்தம் செய்து காணி அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்துவதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஏ) பயிர்ச்செய்கை காணிகளைத் தயார்ப்படுத்துவதற்காக தேவையான இயந்திரங்களை உரிய வேளைக்கு வழங்குவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்காமையின் காரணமாக கம்பனியால் இழக்கப்பட்டதான கணிப்பிடப்பட்ட வருமானம் ஒரு ஹெக்டயருக்கு ரூபா 409,950 ஆகும்.

(ஐ) கரும்பு அறுவடைகளைப் பெற்றுக்கொள்வதற்காக துறைகளைத் தெரிவு செய்யும் ஒவ்வொரு துறையிலிருந்தும் பெற்றுக்கொள்கின்ற கரும்பு மாதிரிகளை தொழிற்சாலை ஆய்வுகூடத்திற்கு அனுப்பி பிழிந்தெடுக்கும் சதவீதம் சம்பந்தமாக வழங்கப்படுகின்ற அவதானிப்புக்களை அடிப்படையாகக் கொண்டு கரும்பு அறுவடைகளைப் பெற்றுக்கொள்ளல் கம்பனியின் பாரம்பரிய முறைமையாக இருந்த போதிலும், பெல்வத்தை சீனிக் கம்பனியின் 2017 பெரும் போகத்தில் கரும்பு அறுவடைகளைப் பெற்றுக்கொள்ளும் போது பணிப்பாளர்கள் சபையின் அங்கீகாரமின்றி கம்பனியின் முன்னாள் பதில் பொதுமுகாமையாளரால் அந்த மரபு ரீதியான நடைமுறை கைவிடப்பட்டிருந்தது. அதற்கிணங்க, கம்பனியால் இழக்கப்பட்ட வருமானம் ரூபா 159,559,000 ஆக துறைசார்ந்த தோட்டப் பிரிவின் முகாமையாளரால் சான்றுப்படுத்தப்பட்டிருந்தது.

(ஒ) 30 ஆண்டுகளுக்கு மேல் பழைமை வாய்ந்த பெல்வத்த சீனிக் கம்பனி தொடர்ச்சியாக செயற்பாட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக அதன் பராமரிப்பு நடவடிக்கைகளை உரிய வேளையில் மேற்கொள்ளும் குறிக்கோளுடன் தேவையான உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக கொள்வனவுப் பிரிவில் காணப்பட்ட குறிப்பிடத்தக்க அளவான தாமதத்தின் காரணமாக 2018 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன்னர் முடிவுறுத்தப்பட வேண்டிய பராமரிப்பு நடவடிக்கைகள் 2018 ஏப்ரல் மாதம் இறுதி வரை முடிவுறுத்தப்படாததன் காரணமாக கரும்பு அரைக்கும் நடவடிக்கைகள் ஒரு மாதத்தால் தாமதமடைந்திருந்தது.

**4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பெல்வத்த சீனிக் கம்பனியின் புலனாய்வுப் பிரிவிற்கு மீளாய்வாண்டின் போது அறிவிக்கப்பட்டிருந்த 104 மொத்த சம்பவங்களில் 36 சம்பவங்களுக்கு மாத்திரம் புலனாய்வு நடவடிக்கைகள் முடிவுறுத்தப்பட்டிருந்தன. போதியளவு புலனாய்வு உத்தியோகத்தர்களைச் சேர்த்துக் கொண்டு புலனாய்வுகளை முடிவுறுத்துவதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) கம்பனியின் சட்டப்பிரிவைப் பரீட்சிக்கும் போது மீளாய்வாண்டின் இறுதிவரை அறிவிக்கப்பட்டிருந்த வழக்குகளுக்குரிய தகவல்களை அல்லது எதுவித கோவையும் நிறுவனத்திடம் இல்லாதிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது சேர்த்துக்கொள்ளப்பட்ட சட்ட உத்தியோகத்தருக்கு அவரின் கடமைகளை முறையாக ஒப்படைத்து சட்டப்பிரிவை முறைப்படியாக ஒழுங்குபடுத்துவதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) செவனகல சீனிக் கம்பனியின் காபன்டயொக்சயிட் தயாரிக்கும் செயற்திட்டம் ஒரு தனியார் கம்பனிக்கு 2014 ஆம் ஆண்டின் போது ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் அதற்குத் தேவையான காணி, மின்சாரம், நீர் மற்றும் ஏனைய உட்கட்டமைப்பு வசதிகளும், எதுவித அறவீடுகளுமின்றி கம்பனியால் வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறே, இந்த விடயங்களைக் கவனத்தில் கொள்ளாது அக்கம்பனிக்கு காபன்டயக்சொயிட் ஒரு கிலோ ரூபா 25 ஆன சந்தை விலையை விடக் குறைந்த விலைக்கு விற்பனை செய்வதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்திருந்ததனால் கம்பனியின் வளங்களைப் பயன்படுத்தி ஒரு தனியார் கம்பனிக்கு 20 ஆண்டுகள் வரை இலாபம் பெற்றுக்கொள்வதற்கு கம்பனி சந்தர்ப்பம் வழங்கியிருந்தும் அந்த விலைகளைத் திருத்தி கம்பனியின் வருமானத்தை அதிகரிப்பதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) செவனகல சீனிக் கம்பனியின் கழிவுநீரை சுத்திகரிப்பதற்குரிய இயந்திரத்தை பொருத்துவதற்காக ரூபா 27,067,812 தொகையான ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்ததுடன் அது 2014 மே மாதமளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டின் இறுதிவரை அதனை பூர்த்திசெய்வதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்காததன் காரணமாக தொழிற்சாலைகள் பெற்றுக்கொள்ள வேண்டிய சுற்றாடல் பாதுகாப்பு உத்தரவுப் பத்திரத்தையும் பெற்றுக்கொள்வதற்கு கம்பனி தவறியிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் போது ரூபா 479,808 தொகைக்கு கொள்வனவு செய்யப்பட்ட எரிபொருள் வழங்கும் இயந்திரம் (Fuel dispensing pump - electric) மூலம் எரிபொருளை வழங்கும் போது வழங்கும் அளவினை விட குறைவாக வழங்கப்பட்டதனால் 2018 சனவரி 23 ஆந் திகதியில் 409 லீற்றர் டீசல் மேலதிகமாகக் காணப்பட்டிருந்தும் இயந்திரத்தை திருத்தம் செய்வதற்கு அல்லது புதிய எரிபொருள் வழங்கும் இயந்திரத்தை வழங்குவதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஊ) செவனகல சீனிக் கம்பனியின் பிரதான களஞ்சியத்தில் காணப்பட்ட 66 ஒக்சிஜன் சிலிண்டர்களில் 22 சிலிண்டர்கள் காணாமல் போயிருந்ததுடன் அது தொடர்பான விசாரணைகளை நடாத்தி பொறுப்பான உத்தியோகத்தர்களிடமிருந்து நட்டத்தை அறவீடு செய்வதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(எ) செவனகல சீனிக் கம்பனியின் களஞ்சியத்தில் காணப்பட்ட எசிடிலின் சிலிண்டர்கள் இருக்க வேண்டிய அளவினை விட 10 மேலதிகமாகக் காணப்பட்டது. கம்பனியால்

களஞ்சிய ஏடுகள் பேணப்படாமையின் காரணமாக இந்த முறைகேடுகள் இடம்பெற்றிருந்த போதிலும் இந்நிலைமையை முகாமைத்துவம் செய்வதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஏ) செவனகல சீனிக் கம்பனியின் பலவீனமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையின் காரணமாக மீளாய்வாண்டில் 26 எசிடிலின் சிலிண்டர்களில் காணப்பட்ட எசிடிலின் வாயு காணாமல் போயிருந்ததன் காரணமாக கம்பனிக்கு ஏற்பட்ட நட்டம் ரூபா 78,185 ஆகும். இது சம்பந்தமாக பொறுப்பான உத்தியோகத்தர்களை இனங்கண்டு நட்டத்தை அறவீடு செய்வதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஐ) அமைப்பு அகவிதி நிருவாக வழிகாட்டி “பட்டோலை G” இன் மூலம் கம்பனியின் செயலாளரின் கடமைப் பொறுப்பாக பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் தொடர்பான நடவடிக்கை அறிக்கைகளைப் பேணுதல் முதலியன தொடர்பான நடவடிக்கை விபரிக்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், கம்பனியின் செயலாளருக்கு அக்கடமைகள் ஒப்படைக்கப்பட்டிருந்ததுடன் அக்கடமைகளை நிறைவேற்றுவதற்கு ஏனைய ஒரு உத்தியோகத்தர் ஈடுபடுத்தப்பட்டிருந்தார்.

**4.3 பயன்படுத்தப்படாத மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்**

---

2013 ஆம் ஆண்டின் போது ரூபா 128,910,000 பெறுமதிக்கு குத்தகை வசதிகளின் கீழ் கொள்வனவு செய்யப்பட்ட கிரேன் இயந்திரம் வழங்குனரினால் கம்பனி இணங்கி கொண்டவாறு தொழிற்சாலையினுள் ஸ்தாபிக்கப்பட்டிருக்காததன் காரணமாக கொள்வனவு செய்த திகதியிலிருந்து எதுவித பயன்பாட்டிற்கும் எடுத்துக்கொள்ள முடியாத நிலையில் காணப்பட்டது. இவ்வியந்திரத்திற்காக மீளாய்வாண்டின் போது கம்பனியால் செலுத்தப்பட்டுள்ள குத்ததை தவணைப் பணங்களின் பெறுமதியும் வட்டியும் ரூபா 21,734,748 ஆக இருந்ததுடன் மேலும் எஞ்சியுள்ள 02 ஆண்டுகள் வரை வட்டியுடன் செலுத்த வேண்டிய மொத்த தவணைப் பணம் ரூபா 27,168,660 ஆக இருந்ததனால் இது விளைவற்ற செலவு என்பது அவதானிக்கப்பட்டது.

**4.4 பதவியணியினர் நிருவாகம்**

---

கம்பனியின் ஆட்சேர்ப்பு நடைமுறை முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்டு பதவியணியினரை உறுதியாக இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுடன் கம்பனியின் பிரதான அலுவலகத்தில் முகாமைத்துவ மட்டத்திலுள்ள 8 உத்தியோகத்தர்கள் குறுங்கால ஒப்பந்தத்தின் அடிப்படையில் சேர்த்துக்கொள்ளப்பட்டு அந்நியமங்கள் மீண்டும் நீடிக்கப்பட்டிருந்தது.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

---

**5.1 கணக்காய்வுக் குழு**

---

கம்பனியால் கணக்காய்வுக் குழு நியமிக்கப்பட்டிருந்த போதிலும், அக்குழுவினால் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், வருடாந்த பொதுக்கூட்டங்களை நடாத்துதல், ஆண்டறிக்கைகளை கம்பனிப் பதிவாளருக்கு அனுப்பிவைத்தல் முதலிய நடவடிக்கைகளின் போது பணிப்பாளர்கள் சபைக்குச் சுட்டிக் காட்டப்பட்டிருக்காததனால் அந்நடவடிக்கைகள் உரிய வேளைக்கு நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

## 5.2 சுற்றாடல் கணக்காய்வு

தொழிற்சாலைகளிலிருந்து வெளியாகும் கழிவு நீரை சுத்திகரிக்கும் பிரிவு மீளாய்வாண்டின் இறுதிவரை பூரணப்படுத்தப்படாதிருந்ததுடன் அக்கழிவு நீரை சுற்றாடலுக்கு விடுவிப்பதனால் ஏற்படுகின்ற சுற்றாடல் பாதிப்புக்களை குறைப்பதற்கு கம்பனி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 5.3 தீர்த்துவைக்கப்படாத கணக்காய்வுப் பந்திகள்

2016 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் 4.1(அ)(i) பந்தியின் பிரகாரம் ரூபா 28,163,089 செலவு செய்து திருத்தம் செய்யப்பட்ட சமூக மண்டபம் மற்றும் விருந்தினர் இல்லத்திலிருந்து செலவு செய்யப்பட்ட கிரயத்திற்கு சமமான பிரதிபலன்களை பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் தொடர்பாக கம்பனியின் தலைவருக்கு அவ்வவ்போது கவனம் செலுத்தப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்படுதல் வேண்டும்.

| முறைமைகள் மற்றும் பட்டுப்பாட்டு அம்சங்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) மனித வள முகாமைத்துவம் | அங்கீகரித்த ஆட்சேர்ப்பு நடைமுறைகளை தயாரித்து நிரந்தர பதவியணியினரை ஆட்சேர்த்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) பெறுகைகள் | பெறுகை வழிகாட்டிக் கோவையிலுள்ள ஆலோசனைகள் பின்பற்றப்பட்டு பெறுகைச் செயன்முறைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |